1982 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின், பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

உறுப்பினர் திரு. எஸ். ரெத்தினராஜ் அவர்கள் பேசும்போது ***என்று குறிப்பிட்டதை நீக்கிவிடும்படி நான் ஆணையிடுகிறேன்

5. அறிவிப்பு

மேலவையிலிருந்து வரப்பெற்ற செய்தி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

(1) 1982 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக் கோவை குற்றவியல் நடைமுறை விதிக் கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1982).

(2) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மருந்துப் பொருள் சட்டத்தின் கீழ் குற்றஞ் செய்பவர்கள், குண்டர்கள், விபசாரக் குற்றஞ் செய்பவர்கள், சட்ட விரோதமாகப் பிறரது நிலத்தில் குடிசை போடுபவர்களின் அபாயகரமான செயல்களைத் தடுக்கும் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1982).

6. கவன ஈர்ப்புகள்.

அ. சென்னை முத்தியால்பேட்டை காவல் நிலையம் தாக்கப் பெற்றது.

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, ''சென்னை முத்தியால்பேட்டை காவல் நிலையம் 15-1-1982 அன்று தாக்கப்பட்டது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1982 மார்ச் 3

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவை முன் கீழ்க் கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

14 – 1 – 1982 அன்று மாலை சுமார் 3-15 மணிக்கு, ஆசீர் வாதபுரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர், சாராயம் குடிப் பதற்காக, பிடாரியார் கோயில் தெருவிலுள்ள சாராயக் கடைக் குச் சென்றார். அப்போது அக்கடையில பாபு என்பவரும் மூர்த்தி என்பவரும் இருந்தனர். அங்கு ஆறுமுகத்திற்கும், பாபு வுக்கும் இடையே வாய்ச் சண்டை ஏற்பட்டது. இது பற்றி ஆசீர்வாதபுர வாசிகளிடையே கூறுவதற்காக ஆறுமுகம் சென்றார் இதன தொடர்பாக, ராஜகுமார் மற்றும் பொன்னுதுரை ஆகி யோர், சுமார் 100 பேரடங்கிய கூட்டத்திற்குத் தலைமை வகித்துச் சென்று, ஆறுமுகத்துடன் ஏன் சண்டையிட்டார் என பாபுவை வினவினர். இந்த வாய்ச் சண்டை வன்முறைக்குத் திரும்பி, அடிதடியில் முடிந்தது. தன்னைப் பிடிக்க முயன்ற ராஜகுமார், பொன்னுதுரை மற்றும் ஆறுமுகம் ஆகியோரை கத்தியால் குத்திய பாபு, தனது சகாவான மூர்த்தியுடன் தப்பி விட்டார். பின்னர் மேற்கூறிய கும்பல் சாராயக் கடைக்குள் நுழைந்து அங்கிருந்த பொருட்களுக்குச் சேதம் விளைவித்ததுடன், சக்திவேலு என்பவருக்கும் காயம் விளைவித்தது. காயமுற்ற ராஜ்குமார், பொன்னுதுரை மற்றும் ஆறுமுகம் ஆகியோர் எண். 3 காவல் நிலையத்தில் புகார் செய்தனர். அவர்கள் சிகிச்சைக்காக ஸ்டான்லி மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டனர். ராஜகுமார் அளித்த புகாரின் மீது ஒரு வழக்கும், சக்திவேலுவின் சகோதரர் ராமு அளித்த புகாரின் மீது ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டன. சக்திவேலுவும் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பப் பட்டார்.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS

2. ஆசீர்வாதபுரம் பகுதியைச் சேர்ந்த சுமார் 300 பேர் காவல் நிலையத்தின்முன் கூடி, பாபுவையும், மூர்த்தியையும் கைது செய்யுமாறு கோரினர். கூடுதல் போலீசார் விரைந்து வந்து, கூட்டத்தினரைச் சமாதானப்படுத்திய பின் கூட்டத்தினர் கலைந்து சென்றனர்.

3. 15 – 1 – 1982 அன்று மாலை 7-30 மணியளவில் பீட்டர் என்பவர் காவல் நிலையத்திற்கு வந்து, பாபு, ராமு மற்றும் இருவர் ஆகியோர் தனது சகோதரனைக் கத்தியால் குத்திக் காய முண்டாக்கிவிட்டதாகக் கூறியதன் பேரில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. காயமுற்றவர் சிகிச்சைக்காக மருத்துவ

மனைக்கு அனுப்பப்பட்டார். அன்றே, மாலை 8-30 மணியளவில் ஆசீர்வாதபுரத்தைச் சேர்ந்த டேவிட் என்பவர், பாபு, ராமு, மூர்த்தி, சாந்தகுமார் ஆகியோரால் கத்தியால் குத்தப் பட்டதாகக் கூறியதன் பேரில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, காயமுற்றவர் ஸ்டான்லி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார்.

4. மேற்படி சம்பவத்தின் தொடர்பாக, மீண்டும் ஆசீர்வாத புரத்தைச் சேர்ந்த சுமார் 300 பேர் கூடி, முத்தியால்பேட்டை காவல் நிலையத்தின்முன் வந்து, பாபுவையும் மற்றவர்களையும் கைது செய்யக் கோரினர். அவர்கள் சமாதானப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர். குற்றவாளிகளைக் கைது செய்ய சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

5. 16—1—1982 அன்று காலை திருமதி வனஜா என்பவர், மினர்வா திரையரங்கத்தினருகே தனது கணவர் திரு. மனோகரன், பாபு, மூர்த்தி மற்றும் இருவரால் கத்தியால் குத்தப் பட்டதாக அளித்த புகாரினடிப்படையில், ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, காயமுற்றவர் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளார். அன்றே, ஜெயபால் என்பவர், தான் புறநகர் பேருந்து நிலையத்தில் காலை 9-30 மணியளவில் பாபு, மூர்த்தி ஆகியோரால் கத்தியால் குத்தப்பட்டதாக அளித்த புகாரின் கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. காயமுற்றவர் சிகிச்சைக் காக மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்.

6. மேற்படி சம்பவங்களில், ஆறுமுகம் மற்றும் நீலகண்டன் தவிர, காயமுற்ற மற்ற அனைவரும் உள் நோயாளிகளாகச் சிகிச்சை அளிக்கப்பட்டனர்.

7. மேற்படி வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் அனைவருமே கைது செய்யப்பட்டு விட்டனர்.

8. கூட்டத்தினர் காவல் நிலையத்தின் மீது, சோடா புட்டிகள் மற்றும் கற்களால் தாக்கினர் என்று கூறுவது சரி அல்ல.

திரு. துரைமுருகன் : ஒரு சண்டை ஒன்பது சண்டைகளாக வளர்ந்து ஒருவர் குத்த அதைத் தொடர்ந்து எட்டு பேர்கள் குத்தப்படுவது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. மொத்தமாக பார்த்தால் இது சாராயக் கடையில் சாராயம் குடிப்பதிலிருந்து ஆரம்பமாகியிருக்கிறது. ஒருவரை மாற்றி மற்றொருவர் குத்தக் கூடிய நிலைமை வந்திருக்கிறது. இவர் மீது வழக்கு போடப்பட்டி ருக்கிறது என்றும் சொல்கிறார்கள். இவ்வளவு பேர்களைப் பிடித்தி

ருக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். சாராயம் குடிக்கிறவர்கள் பெர்மிட் வைத்துக்கொண்டுதான் குடிக்கவேண்டும் என்றிருக்கிறது. குத்தியவர் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது என்றால் எந்தக் குற்றத்தின் அடிப்படையில் அவர்கள் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது? அட்டம்பட்டு மர்டர் என்பதன் அடிப்படையிலா? அல்லது பர்மிட் இல்லாமல் சாராயம் குடித்தார்கள் என்பதன் அடிப்படையில் வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறதா? எவ்வளவு பேர்கள் பர்மிட் வைத்திருக்கிறார்கள்? ஒட்டுமொத்தமாக எல்லோரும் கைது செய்யப்பட்டார்கள், எல்லோரும் காவலில் வைக்கப்பட்டார்கள், எல்லோரும் விடப்பட்டார்கள் என்றால் எப்படி ஸ்பெஸிபிக்காக என்னென்ன குற்றங்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பாபு என்பவரும் மற்றவர்களும் பல்வேறு வன்முறைச் செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதால் அவர்களைப் பொறுத்தவரையில் அந்தந்த காவல் நிலையங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. குற்றவியல் சட்டப்படி பிரிவுகள் போடப்பட்டிருக்கின்றன. அந்தப் பிரிவுகளின் எண்ணிக்கையை வேண்டுமானால் பிறகு பார்த்துச் சொல்லலாம். வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

ஆகவே, இப்படி பயங்கரமான முறையில் ஈடுபட்டதன் காரணமாக, பாபு, மூர்த்தி ஆகிய இருவரும் அவசர சட்டத்தின் கீழ், குண்டர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற மூவரில், ராமு நிபந்தனை ஜாமீனில் உள்ளார். மற்ற இருவரும், காவலில் உள்ளே வைக்கப்பட்டு, வழக்குகள் தொடரப்பட்டு தொடர்ந்து நடைபெறுகிறது.

திரு. துரைமுருகன்: நான் கேட்பது சிம்பிள் கொஸ்டின் அவர்கள்மீது போடப்பட்ட வழக்குகள், எந்த செக்ஷனிலே போடப்பட்டிருக்கிறது? குறிப்பாக, சாராயக் கடையிலே சாராயம் குடிக்கும் போது இது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அத்தனை பேர்கள் மீதும் பர்மிட் இல்லாமல் குடித்தார்கள் என்று வழக்கு போடப்பட்டுள்ளதா? எத்தனை பேர்கள் பர்மிட் வைத்திருந்தார்கள்? அவர்கள்மீது வேறு ஏதாவது செபரேட் சார்ஜஸ் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டபடி, அவர்கள்மீது என்னென்ன செக்ஷன்கள் கீழ் வழக்கு போடப்பட்டிருக்கின்றது என்ற குறிப்பு என்னிடம் இல்லை. தனியாகச் சொல்கிறேன்.

1982 மார்ச் 3]

(ஆ) கிருட்டிணகிரி அரசு கலைக் கல்லூரி மூடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. க. இரா. சின்னராசு அவர்கள்,

''கிருட்டிணகிரியிலுள்ள அரசு கலைக் கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டுள்ளது குறித்து.''

ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர்கள் இருக்கையில் இல்லாததால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான அறிக்கையை அவைமுன் வைக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

கடந்த 9—2—1982 முதல் அரசினர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி காலவரையின்றி மூடப்பட்டன. இதற்கான அடிப்படைக் காரணங்கள்—

1. கடந்த சில மாதங்களில் குறிப்பிட்ட சில கல்லூரி மாணவர்கள் மாணவியரைத் தகாத வார்த்தைகளால் கேலிசெய்து கொண்டு வந்திருக்கிறார்கள். முதல்வரும் ஆசிரியர்களும் அவ்வப்பொழுது அந்தந்த மாணவர்களுக்கு அறிவுரையும் கண்டனமும் தெரிவித்து வந்திருக்கிறார்கள். 29—1—1982, அன்று மூன்று மாணவிகள் ஒரு மாணவர் செய்த தரக்குறைவான செயல் குறித்து முதல்வருக்கு எழுத்து மூலம் மனுக் கொடுத்தனர். அவர்களின் பெற்றோரும் முதல்வரிடம் முறையிட்டனர். அதன் பேரில் அம்மாணவர் அவரது பெற்றோருடன் முதல்வரை 8—2—1983ம் தேதி சந்தித்தார். அம்மாணவரின் சூழ்நிலையின், காரணமாகவும் கல்லூரிக் கல்வியினை முடிப்பதற்கு இன்னும் இருமாதங்களே இருப்பதாலும், அம்மாணவரின் எதிர்காலம் பாதிக்கப்பட வேண்டாம் என்ற நல்லநோக்கத்துடன் அம்மாணவரை கல்லூரியிலிருந்து தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ இன்றுவரை நீக்கப் படாமல் ஆனால் கல்லூரியில் தகாத நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெறாமல் இருக்கும்பொருட்டு அவர் கல்லூரிக்கு வரவேண்டாமென அறிவுட்டுத்தப் படடுள்ளார். அம்மாணவரும், அன்று பெற்றோரும் இதற்கு உடன்பட்டனர்.

2. 9—2—1982 செவ்வாய்க்கிழமை காலை, வழக்கம்போல் கல்லூரி துவங்கி அமைதியாக நடைபெற்றுக் கொண்டு இருந்தது காலை 10-30 மணி அளவில் கல்லூரி ஒன்னிறிய மாலை மாணவ

பேரவைத் தலைவரும் அவரது நண்பர்களும் எல்லா வகுப்புகளுக்கும் சென்று மாணவர்களைக் கட்டயமாக திடீரென வெளியேற்றினர். முதல்வருக்கோ, அல்லது எந்தப்பேராசிரியருக்குமோ முன்னறிவிப்பு ஏதும் தராமல் இக்காரியத்தைச் செய்தனர். மாணவர்கள் கூட்டமாகக் கல்லூரியை விட்டுவெளியேறிக் கல்லூரிக்கு வெளியே ஏதோ திட்டங்கள் தீட்டி வந்தனர். மேலும் என்ன காரணத்திற்காக இம்மாதிரி தகாத நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்றும் முதல்வருக்கோ, மற்றவர்கட்கோ, அறிவிக்கப்படவில்லை. ஆகவே, கல்லூரியில் அசம்பாவித நிகழ்சிகள் நடை பறக் கூடுமென எதிர்பார்த்து கல்லூரி காலவரையின்றி மூடப்படடது.

3. 10.2,82 புதன் கிழமை காலை 10-30 மணிக்கு மாணவர் பலருடன் மாணவர் பேரவைத் தலைவர் முதல்வர் அறைக்குள் திடீரன புகுந்து மேலே பத்தி 1.ல் குறிப்பிட்ட மாணவரை ஏன் நீக்கினீர்கள் எனக் கூச்சலிட்டார். நடந்தவற்றை அமைதியாகக் அறியும் மாணவர் ஆவைத்தலைவர் முதல் வரை தரக் கூறைவான வாரத்தைகளால் ஏ.சி. முதல்வர் மீது கல் எறிதல் போன்ற வன்முறைகளில் ஈடுபட்டனர். மாணவர்களின் நோக்கம் என்ன? என்ன குறைபாடுகள் உள்ளன? அவர்களது நியாயமான எதிர்பார்ப்புகள்என்ன என்பதை எழுத்து வடிவில் முதல்வரிடம் இது நாள் வரை தெரியப்படுத்தவில்லை மாணவர் தலைவர்கள் மட்டும் தனியாக வந்து பிரச்சினைகளைப் பேச முன்வரவில்லை. மாறாகக் கும்பலுடன் கல்லூரிக்குள் புகுந் , சன்னல் கதவுகள், அறிவிப்புப் பலகைபின் கல்லூரிகளில் புகுந்து, சன்னல் கதவுகள், அறிவிப்புப் பலகைகள் போன்றவற்றை உடைத்தார்கள். முதல்வர் அறையில் கதவுகளையும் உடைத்தார்கள். 9—2—1982 அன்று மாலை எத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடும் என்ற அய்யப் பாட்டில் கல்லூரி மூடப்பட்டதோ, அவை 10—2—1982ல் நீடிதத்தது நிகழ்ந்து, அய்யப்பாட்டினை உறுதிப்படுத்தின. இந்த அசம்பாவித நிகழ்ச்சிக்குப் பிறகு காவல்துறையின் துனண நாடபட்டு கல்லூரிக் கட்டடங்கள் பாதுகாப்பிற்காக அவர்கடளிம் ஒப்படைகப்பட்டுள்ளன

4. கல்லூரியில் எல்லா நிகழ்ச்சிகளும் மாணவர் தலைவர் கூறுகின்றபடிதான் நடைபெறவேண்டும் என்றும், மாணவத் தலைவரைக் கேட்காமல் தவறு செய்யும் மாணவர்களைத் தண்டிக்கவோ, விசாரிக்கவோ கூடக் கூடாது என்றும், மாணவத் தலைவரும் அவரது சகாக்களும் கூச்சலிடுகின்றன. இத்தகைய நிலையில் கல்லூரித் தலைவரும், மற்ற ஆசிரியர்களும் தங்கள் பணியினைச் செய்ய முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

1982 மார்ச் 3] தி செ அரங்கநாயகம்

(5) இம்மாதிரியான பிரச்சினைக்குரிய சில மாணவர்கள் கல்லூரியில் தொடர்ந்து நீடித்தால் கல்லூரிப் பணிகள் சுமுகமாக நடைபெற முடியாது. பல்கலைக்கழக விதிகளின் படி தேவையான அளவு கல்லூரி வேலைநாட்கள் இல்லாது போய் விட்டால், எல்லா மாணவ, மாணவியரும் இறுதித்தேர்வு எழுததத் தகுதி இழப்பார்கள். இக்கல்லூரியில் பயிலும் பெரும்பான்மையான மாணவர்கள் ஒழுங்காகப்படிக்க விரும்பு கின்றனர். கடந்த ஆண்டுகளில் இக்கல்லூரிகளில் ஆண்டு இறுதித் தேர்வு முடிவுகளைக் கவனிக்கும்பொழுது, மாநிலத்திலே கல்வித்தரத்தில் முதன்மை நிலையில் உள்ள கல்லூரிகளில் இக் கல்லூரியும் ஒன்று எனத்தெரியும். கடந்த மூன்றாண்டு காலமாக ஒழுக்கத்தைப் பேணும் நல்லதொரு கல்லூரி எனப் புகழப்பட்ட கல்லூரியாகும் இது. ஒழுக்கத்திலும், கல்வித்தரத்திலும் இது என்றும் முதன்மைக் கல்லூரியாக இருக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்காது.

6. 15—2—1982 அன்று பெற்றோர் மற்றும் நகரப்பிரமுகர்கள் கல்லூரி முதல்வரைச் சந்தித்து கல்லூரித் திறப்பதற்கு வேண்டிய வழிமுறைகளைப் பற்றி பேசினர். அக்கூட்டத்தில் மாணவர் களைத் தூண்டிவிட்ட குறிப்பிட்ட 5 மாணவர்கள் எழுத்துமூலம ாக மன்னிப்பு கோரவேண்டுமெனவும், வருங்காலத்தில் நல்வழியில் நடப்பதாக உறுதிதர வேண்டும் எனவும் இவ்வருடம் மீதமுள்ள கல்லூரி நாட்களில் எந்தவிதமான மாணவர் மன்றங்கள் துணை மன்றங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகள் இருக்கக்கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

7. அதன்படி மாணவர் மன்றத்தலைவரும், மற்ற முக்கிய மாணவர்களும் எந்தவித நிபந்தனையுமின்றி மன்னிப்புக்கோரிய தால கல்லூரி 22—2—1982 முதல் தொடங்கப்பட்டு தற் பொழுது அமைதியாக நடந்துவருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

7. வரவு செலவுத் திட்டம்.

1982–83—பொது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. சி. த. சிதம்பரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982–83ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பட்ஜெட்டைப் பற்றி பேச வேண்டிய ஆளுங் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் பாத யாத்திரையைப் பற்றிப் பேசினார்கள். ஆகவே, பட்ஜெட்டில் ஒன்றுமில்லை என்பதை தெளிவாக எடுத்துக் காட்டினார்கள் என்பதை நான்